## கடவுள் எப்படிப்பட்டவராக இருக்கிறார்?

**கடவுள் எப்படிப்பட்டவர் என்று கிறிஸ்தவர் அல்லாத ஒருவர் கேட்டால் உங்கள் பதில் என்னவாக இருக்கும்?**

**- K. இதயநாதன்**

அனைத்து சமயத்தவரும் கடவுள் ஒருவரே என்பதை அடிப்படைக் கொள்கையாகக் கொண்டுள்ளனர் 'ஒன்றே குலமென்று பாடுவோம்; ஒருவனே தேவன் என்று போற்றுவோம்' என்பதும் கிறிஸ்தவர் அல்லாத ஒருகவிஞர் எழுதிய வரிகள்தான். ஆகவே, கடவுள் ஒருவரே என்பது பொதுவான நம்பிக்கை. ஆனால், கடவுள் எப்படி இருப்பார் என்று கேட்டால், கிறிஸ்தவர் இறையியலின் படி நான்கு முக்கிய உண்மைகளை முன்வைத்து விளக்கலாம். இவை மனித அறிவை மட்டும் வைத்துப் புரிந்து கொள்வது கடினம். ஆனாலும், நமக்கு வெளிப்படுத்தப்பட்ட மறையுண்மைகள் அடிப்படையில் விளக்க இயலும்.

**1. கடவுள் தானாக இருக்கிறவர்.**

இந்த உலகத்திற்கும், உலகத்தில் உள்ளவற்றிற்கும், அதைச் சுற்றியுள்ள அனைத்துக்கும் ஆரம்பம் என்று உண்டு. கடவுளுக்கு மட்டுமே ஆரம்பம் கிடையாது. தானாகவே அவர் இருந்தார். கடவுளைத் தவிர மற்றனைத்தும் அவரால் படைக்கப்பட்டவை. கடவுள் தானாக இருந்தார் என்பது நமது கிறிஸ்தவ இறையியலின் முதல் படிப்பினை.

**2. கடவுள் எல்லையற்றவர்.**

கடவுள் ஆழம், அகலம் என எல்லையற்றவர். அவரை அளக்க இயலாது. இவ்வுலகில் உள்ள அனைத்திற்கும் எல்லை உண்டு. அவை அளக்கக் கூடியதை. கடவுள் மட்டுமே அளவற்றவர். அவரது அன்பு, கருணை, இரக்கம் போன்றவை கூட அளவற்றவை.

**3. கடவுள் முடிவற்றவர்.**

கடவுள் ஒரு காலத்துக்கு மட்டுமே உரியவர் அல்ல. காலம் அவரைக் கட்டுப்படுத்தாது. அவர் முடிவில்லாதவர். காலங்களும் யுகங்களும் அவருடையன. சுருங்கச் சொன்னால், மேலும் இன்றும் முதலும் முடிவும் அவரே.

**4. கடவுள் போதுமானவர்.**

கடவுளுக்குத் தேவைகள் இல்லை. அவர் எதையும் சார்ந்து இல்லை. படைப்புகள்தான் அவரைச் சார்ந்து உள்ளன.

இவ்வாறாக மேற்கஞ்ட நான்கு அடிப்படைத் தன்மைகளை விவரித்து கடவுள் எப்படிப்பட்டவர் என்பதை எடுத்துரைக்கலாம். இது நமது இறையியலின் வெளிப்பாடு.

**- ஆர்.கே.**

# ஓ, கிறிஸ்துவின் சிலுவையே - திருத்தந்தை



வத்திக்கான் நகரின் கொலோசியம் திடலில் மார்ச் 25, புனித வெள்ளியன்று நிகழ்ந்த சிலுவைப்பாதையின் இறுதியில், திருத்தந்தை கூறிய செபம்:

ஓ கிறிஸ்துவின் சிலுவையே, இறையன்பிற்கும், மனித அநீதிக்கும் அடையாளமே, உன்னதத் தியாகத்திற்கும், கட்டுக்கடங்காத சுயநலத்திற்கும் குறியீடே, மரணத்திற்கும், உயிர்ப்பிற்கும் கருவியே, கீழ்ப்படிதலுக்கும், காட்டிக் கொடுத்தலுக்கும் அடையாளமே, இன்று எங்கள் சகோதர, சகோதரிகள் கொல்லப்படுவதிலும், உயிரோடு எரிக்கப்படுவதிலும், அரக்கத்தனமான கத்திகளால் தலையும், கழுத்தும் வெட்டப்படுதலிலும், இவையணைத்தையும் கண்டு அச்சம் கொண்டு மௌனம் காப்பதிலும், ஓ கிறிஸ்துவின் சிலுவையே, நீ உயர்த்தப்படுவதைக் காண்கிறோம்.

போர், வன்முறை, இவற்றிலிருந்து தப்பியோடும் குழந்தைகள், பெண்கள், மக்கள், மீண்டும் தங்கள் மரணத்தைச் சந்திப்பதிலும், பல பிலாத்துகள் கரங்களைக் கழுவுவதிலும் ஓ கிறிஸ்துவின் சிலுவையே, உன்னைக் காண்கிறோம்.

இரக்கத்தையும், வாழ்வையும் கற்றுத்தருவதற்குப் பதில், தண்டனை, மரணம் ஆகிய அச்சங்களை ஊட்டும் மரணத்தின் அறிஞர்கள் வடிவில், ஓ கிறிஸ்துவின் சிலுவையே உன்னைக் காண்கிறோம்.

தங்கள் தற்பெருமைக் கனவுகளைக் களைவதற்குப் பதில், மாசற்றவர்களின் மாண்பைக் களைந்து விடும் நம்பிக்கைத் துரோகம் செய்யும் பணியாளர்கள் வடிவில், ஓ கிறிஸ்துவின் சிலுவையே உன்னைக் காண்கிறோம்.

மாசற்ற சகோதர, சகோதரிகளின் இரத்தத்தைக் கொண்டு, போர் என்ற சூளையின் தீயை, தொடர்ந்து வளர்ந்துவரும் சக்தி வாய்ந்தவர்கள், போர்க்கருவி வர்த்தகர்கள் வடிவில், ஓ கிறிஸ்துவின் சிலுவையே உன்னைக் காண்கிறோம்.

வாசலில் பசியுடன் கிடக்கும் லாசர்களை அலட்சியம் செய்துவிட்டு, தங்கள் செல்வங்களைக் குவிப்பதற்கு, களஞ்சியங்களை இடித்துக் கட்டும் மதியிழந்தவர்கள் வடிவில், ஓ கிறிஸ்துவின் சிலுவையே உன்னைக் காண்கிறோம்.

வருங்காலத் தலைமுறையினரின் எதிர்காலத்தை நிர்மூலமாக்கும் வகையில், தங்கள் சுயநலத்தால் எங்கள் பொதுவான இல்லத்தை அழித்து வருவோரின் வடிவில் ஓ கிறிஸ்துவின் சிலுவையே உன்னைக் காண்கிறோம்.

மற்றவர்களின் புகழையும், அங்கீகாரத்தையும் பெறுவதைப்பற்றி கவலைப்படாமல், நல்லவற்றை செய்து, உயிர்ப்பிற்கு வழியாய் அமைவோரின் வடிவில் ஓ கிறிஸ்துவின் சிலுவையே உன்னைக் காண்கிறோம்.

பிறரது இருள்போக்கும் மெழுகுதிரிகளாய் தங்களை எரித்துக்கொண்டு, பணிவுடன் செயலாற்றும் பணியாளர்கள் வடிவில் ஓ கிறிஸ்துவின் சிலுவையே உன்னைக் காண்கிறோம்.

நீதி, நம்பிக்கை இவற்றின் வெளிப்பாடாக, இரக்கத்தைக் கண்டுகொண்ட இரக்கம் நிறைந்தோர் வடிவில் ஓ கிறிஸ்துவின் சிலுவையே உன்னைக் காண்கிறோம்.

திருமண வாழ்வு என்ற அழைப்பில், பிரமாணிக்கமாய் வாழ்வோரின் குடும்பங்களில் ஓ கிறிஸ்துவின் சிலுவையே உன்னைக் காண்கிறோம்.

தங்கள் கிறிஸ்தவ நம்பிக்கைக்காக துன்புற்றாலும், தொடர்ந்து கிறிஸ்துவுக்கும், நற்செய்திக்கும் சாட்சிகளாய் வாழ்வோர் வடிவில் ஓ கிறிஸ்துவின் சிலுவையே உன்னைக் காண்கிறோம்.

கனவு காண்போர், குழந்தை மனம் கொண்டோர், இவ்வுலகை அதிகம் மனிதமுள்ளதாக, நீதியுள்ளதாக மாற்றுவதற்கு உழைப்போர் வடிவில் ஓ கிறிஸ்துவின் சிலுவையே உன்னைக் காண்கிறோம்.

கிறிஸ்துவின் சிலுவையே, பாவம் என்ற கடலின் வெள்ளப்பெருக்கிலிருந்து எம்மைக் காக்கும் நோவாவின் பெட்டகமே, தீயோனிடமிருந்தும், தீமைகள் அனைத்திலிருந்தும் காத்தருளும். கிறிஸ்துவின் சிலுவையே, இரவின் இருளைவிட, உதிக்கும் ஞாயிறு சக்தி வாய்ந்ததெனச் சொல்லித் தா!

காலியான கல்லறை முன்பு, உயிர்ப்பு நிச்சயம் என்ற உண்மைக்கு முன்பு, இறைவனின் அன்பிற்கு முன்பு, வெற்று பெறுவதுபோல் தோன்றும் தீமை நிற்க முடியாது என்பதை எங்களுக்குச் சொல்லித் தா!

# வார்த்தைகள் ஏதுமின்றி வழிகாட்டும் புனித யோசேப்பு

இயேசுவின் வளர்ப்புத் தந்தை புனித யோசேப்பு பேசிய வார்த்தைகளான விவிலியத்தில் ஏதும் குறிப்பிடப்படவில்லை. எனினும், அவரைப் பற்றி நற்செய்தியாளர்கள் விவரித்துள்ளவை, அவரின் ஆன்மீகத்தை எடுத்துரைப்பவைகளாக உள்ளன என்றார். திருப்பீடச் செயலர் கர்தினால் பியெத்ரோ பரோலின்.

முன்னாள் யுக்கோஸ்லாவிய குடியரசான மசடோனியாவில், மேய்ப்புப்பணி சார்ந்த பயணம் மேற்கொண்டு வரும் கர்தினால் பரோலின் அவர்கள், அருளாளர் அன்னை தெரேசா அவர்களின் பிறப்பிடமான, ஸ்கோஜே நகரின், இயேசுவின் திருஇருதய ஆலயத்தில் நிறைவேற்றிய திருப்பலி மறையுரையாற்றுகையில், புனித யோசேப்பின் சிறப்பு பண்புகள் குறித்து எடுத்துரைத்தார்.



அன்னை மரியா கருதரித்தது குறித்து குழப்பம் தனக்குள் எழுந்தாலும், அதற்கு இரையாகாமல், இறைவனின் தீர்வுக்கு செவிமடுத்து புனித யோசேப்பு, இயேசுவின் மீட்புப் பணியிலும் பங்கெடுக்கிறார் என்றார் கர்தினால் பரோலின்.

இறைச் சட்டங்களை ஒழுங்காக கடைப்பிடித்ததன் வழியாக மத்தேயு நற்செய்தியாளரால் 'நீதிமான்' என அழைக்கப்படும் புனித யோசேப்பு, நம் நியாயமான விருப்புகளையும் தாண்டி, இறைவனில் நாம் நம்பிக்கைக் கொள்ள வேண்டும் என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளார் கூறினார் கர்தினால் பரோலின் அவர்கள்.

# அன்பு என்பது தெய்வீகமானது...

“இதோ எந்தன் தெய்வம் முன்னாலே, ஒரே ஒரு புன்னகையில் கண்டேனே” எனும் பாடல் வரிகளை முணுமுணுக்கும்போது உடலில் ஏதோ ஒருவிதமான புத்துணர்வு ஏற்படுவதை அறியலாம். ஆம், கண் முன் தோன்றும் மனிதர்களை அன்பு செய்ய முடியவில்லை என்றால் கண்ணுக்கு புலப்படாத கடவுளை எவ்வாறு அன்பு செய்ய இயலும். இன்றைய நற்செய்தியில் இயேசுவும் யோவான் மகன் சீமோன் இவர்களின் உரையாடல் நமக்கு 'அன்பை' குறித்து வெளிப்படுத்துகிறது.

அன்பை செல்லால் வர்ணிக்க முடியாது அது அனுபவ ரீதியாக உணர்ந்தால்தான் அன்பின் சிறப்பு புரியும். இதோ ஒரு பெண்மணியின் சோகக்குரல்: சுமார் பதினெட்டு ஆண்டுகள் கழித்து இப்பெண்மணியைச் சந்தித்தேன். கணவரை இழந்த சூழ்நிலையில் அவரைச் சந்தித்தேன். கணவரின் பிரிவைக் குறித்து அதிகமாகவே தொட்டுப் பேசினார். “எனக்கு அவர் மீது அதிக பிரியம். என்னை பாசத்தோடு கவனித்துக் கொண்டார். எங்கு போக வேண்டும் என்று சொன்னால் போதும் கூட்டிக்கொண்டு போவார். என்ன வேண்டும் என்று சொன்னால் போதும் உடனே கைக்கு வந்துவிடும். நானோ பிள்ளைகளோ எது கேட்டாலும் மறுக்காது நிவர்த்தி செய்து விடுவார். எங்கு சென்றாலும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு எங்களின் நிலவரத்தைக் கேட்டு அறிந்துகொள்வார். மரணம்வரை முகம் சுளித்தது கிடையாது. கத்தினது கிடையாது. நானும் பிள்ளைகளும் வெளியே சென்றால், 'என்னாலா செய்றீங்க சுருக்கா வாங்கலா' என எங்கள் வருகைக்காக பாசத்தோடு காத்திருப்பார். எனக்கு அவரை ரொம்ப பிடிக்கும். இன்றும் அவரின் பிரிவு என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லைதான். அவர் விட்டு சென்ற அவரின் பொருள்கள் என்னுடன் பேசிக்கொண்டுதான் இருக்கின்றன” என கண்ணீர் மல்க பகிர்ந்து கொண்டார். அன்பு செய்யப்பட்ட கணவரின் பிரிதிபலிப்பை வெளிப்படுத்தின கணவரின் அன்புக்கு ஈடேது என என் மனதுக்குள் அம்மனிதரை நினைத்து மகிழ்வு கொண்டேன்.

அன்பு இருந்தால், என் ஆட்டுக்குட்டிகளை பேணி வளர்.

என் ஆடுகளை மேய்.

என் ஆடுகளைப் பேணி வளர்.

என ஆண்டவர் இயேசு, யோவான் மகன் சீமோனிடம் (பேதுரு) கட்டளையிடுகிறார். நம்முடைய அன்றாட வாழ்க்கையில் அன்பை வெளிப்படுத்த பல தருணங்கள் நம்மை நாடிவரும். அவைகளை எவ்வாறு எவ்வகையில் வெளிப்படுத்தி இரக்கத்தின் ஆண்டில் அன்புக்கு சாட்சியாக திகழ முயற்சிக்கப் போகிறோம்.

**- ஆ.வி.டேவிட்**

## பாஸ்கா 3 ஆம் ஞாயிறு

**தி.பணி: 5:27-32, 40-41**
**திபா. 30: 1, 3, 5, 10-12**
**தி.வெ. 5: 11-14**
**யோவான்: 2: 1-19**

**கவனத்திற்கு**

**ஞாயிறு வாசகம்: ஆண்டு 3**
**வாரநாள் வாசகம்: ஆண்டு 2**
**திருபுகழ் மாலை 10+-4-2016 : பாஸ்கா காலம்**